மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு மிகப் பெரிய நிதிநிலை நெருக்கடிக்கு இன்றைக்கு ஆளாகி இருக்கின்ற காரணத்தினால் இந்தக் கோரிக்கைக்கு இடமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நிதி நெருக்கடி இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். இருந்தாலும்கூட, மாதம் 50 ரூபாய் கொடுப்பது மிகவும் போதவில்லை. அதை 75 ரூபாயாகவாவது உயர்த்த வேண்டும். ஒரு விதவைக்கு 50 ரூபாய், ஒரு ஓல்டு ஏஜ் பென்ஷனர். அவருக்கும் 50 ரூபாய் என்றால் மிகவும் போதாமல் இருக்கிறது. எனவே, 75 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அடுத்த ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு பரிசிலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

4. அறிவிப்புகள்.

(அ) இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவது குறித்து:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகிற நிகழ்ச்சியாகவும், தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி

1992 ஜனவரி 30]

ஏற்கும் நிகழ்ச்சியாகவும், நம்முடைய பேரவைச் செயலகத்திற்குப் பின்புறம் உள்ள பயிற்சி மைதானத்தில் நடைபெற இருக்கிற நிகழ்ச்சிக்காக, பேரவை இப்போது ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் 11.30 மணிக்குக் கூடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேரவை இப்போது ஒத்திவைக்கப்படுகிறது.

பின்னர் பேரவை முற்பகல் 10.48 மணியளவில் ஒத்திவைக்கப் பெற்றது.

முற்பகல் 11-30

முற்பகல் 11.30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாற்றுத் தலைவர்கள் பட்டியல். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப் பேரவையின் மூன்றாம் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

1. திரு. ம. சின்னசாமி.
2. திரு. வ. சத்தியமூர்த்தி.
3. திரு. ஆர். சிங்காரம்.
4. திரு. வே. தம்புசாமி.
5. திரு. நா. சா. பழனிசாமி.

5. சிறப்புக் குறிப்புகள்.

(அ) வினாப் பட்டியலிலுள்ள இரு வினாக்கள் எடுக்கப் பெறாதது பற்றி அறிவிப்புச் செய்யவேண்டியதன் அவசியம் குறித்துக் குறித்து.

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விப் பட்டியலிலே இரு கேள்விகள் இருந்தன. அவற்றின் நிலை என்னவாயிற்று?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS